# பெப்ரவரி - 05 - பொதுக்காலம் 5ம் வார ஞாயிறு

**“நம் ஆண்டவராகிய கடவுளைப் போல் வேறு யார் உண்டு!” - திபா 112:6**

---

## முதல் வாசகம் : ஏசாயா 53: 7 - 10

அவர் ஒடுக்கப்பட்டார் சிறுமைப்படுத்தப்பட்டார் ஆயினும், அவர் தம் வாயைத் திறக்கவில்லை அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார்.அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டார் அவருக்கு நேர்ந்ததைப்பற்றி அக்கறை கொண்டவர் யார்? ஏனெனில், வாழ்வோர் உலகினின்று அவர் அகற்றப்பட்டார் என் மக்களின் குற்றத்தை முன்னிட்டுக் கொலையுண்டார்.வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை ஆயினும், தீயவரிடையே அவருக்குக் கல்லறை அமைத்தார்கள் செத்தபோது அவர் செல்வரோடு இருந்தார்.அவரை நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார் அவர் தம் உயிரைக் குற்றநீக்கப்பலியாகத் தந்தார் எனவே, தம் வழிமரபு கண்டு நீடு வாழ்வார் ஆண்டவரின் திருவுளம் அவர் கையில் சிறப்புறும்.

**பதில்பாடல்:** ஆண்டவருக்கு அஞ்சுவோர் இருளில் ஒளியென மிளிர்வர்

## இரண்டாம் வாசகம்: 1கொரிந்தியர் 2:1-5

சகோதர சகோதரிகளே, கடவுளைப் பற்றிய மறைபொருளை அறிவிக்க நான் உங்களிடம் வந்தபோது மிகுந்த சொல்வன்மையுடனோ ஞானத்துடனோ வரவில்லை.நான் உங்களிடையே இருந்தபோது மெசியாவாகிய இயேசுவைத்தவிர, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, வேறு எதையும் அறியவேண்டும் என்று நினைக்கவில்லை. நான் உங்கள் நடுவில், வலுவற்றவனாய், மிகுந்த அச்சத்தோடும் நடுக்கத்தோடும் இருந்தேன்.நான் பறைசாற்றிய செய்தி ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை. ஆனால் அது தூய ஆவியின் வல்லமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல, கடவுளின் வல்லமையே.

## நற்செய்தி: மத்தேயு 5:13 - 16

அக்காலத்தில் ஆண்டவர் இயேசு கூறியதாவது: “நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும் வேறு ஒன்றுக்கும் உதவாது.நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது.எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும்.இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்“ என்றார்.

**தியானம்:** இயேசு தம் சீடருக்கு, “நீங்கள் மண்ணுலகிற்கு உப்பு, நீங்கள் உலகிற்கு ஒளி“ (மத்தேயு 5:13-14) என்னும் உருவகத்தை எதற்காகப் பயன்படுத்தினார்?. “உப்பில்லாப் பண்டம் குப்பையிலே“ என்பதற்கேற்ப, உப்பு உணவுக்குச் சுவை சேர்க்கிறது. பொருள்கள் கெட்டுவிடாமல் பாதுகாக்கவும், தூய்மையாய் இருக்கவும் பயன்படுகிறது. இயேசுவின் சீடர்களும் உப்பைப்போல இந்த உலகிற்கு நமதாண்டவர் இயேசுவின் சுவையைக் கொடுக்கும் போது மக்கள் கடவுளின் அன்பைச் சுவைக்க முடியும். இயேசுவின் சீடர்களான நாம் இவ்வுலகைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்க வேண்டும். உப்பு தன் காரத்தை இழந்து விடக்கூடாது. அதுபோல சீடர்களான நாமும் துன்பங்களுக்கு நடுவே எங்கள் உள உறுதியை இழந்துவிடலாகாது (மத்தேயு5:11-12) என நாம் பொருள்கொள்ள வேண்டும். இயேசு தமது சீடர்கள் “உலகுக்கு ஒளி“ என்கிறார். இயேசுவின் சீடர்கள் ஏழையரின் உள்ளத்தவராய், இரக்கப் பண்பு நிறைந்தவராய், பிறருக்கு உதவுகின்ற வேளையில் உலகுக்கு ஒளியாக விளங்குவார்கள் என்று போதிக்கிறார். இத்தகைய ஒளி பிறருடைய வாழ்வை ஒளிமயமானதாக மாற்றும் பிறரை அடக்கி ஆளுகின்ற போக்கு அங்கே இராது. இவ்வாறு, இயேசு தம் சீடர்களை “உலகுக்கு உப்பாகவும் ஒளியாகவும்“ இருக்கும்படி அழைக்கிறார். உணவில் சேர்க்கப்படுகின்ற உப்பு உணவுக்குச் சுவையூட்டும், ஆனால் தன்னையே கரைத்துவிடும். அதுபோல, தண்டில் வைக்கப்பட்ட விளக்கு வீட்டிலிருக்கின்ற பொருள்கள் தெரியும் விதத்தில் ஒளிபரப்பும், ஆனால் தன்னை வெளிச்சமிட்டுக் காட்டாது. இவ்வாறு இயேசுவின் சீடர்களும் தாங்கள் புரிகின்ற நற்செயல்கள் வழியாகக் கடவுளுக்குப் பெருமை சேர்க்கவேண்டும். மாறாகத், தம்மையே முன்னிறுத்தக் கூடாது. இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள் கடவுளின் அன்பைச் சுவைக்க உதவுகின்ற “உப்பாக“ மாறவேண்டும். உலக மக்கள் கடவுளை நோக்கி நடந்து செல்ல வழிகாட்டுகின்ற “ஒளியாக“ விளங்கவேண்டும். நாம் எம்மாத்திரம்?